**உள்ளூர் அபிவிருத்தி ஆதரவளித்தல் செயற்திட்டம் - 2022**

-----------------------------------------------------------------------------

உள்ளூர் அபிவிருத்தி ஆதரவளித்தல் செயற்திட்டத்தின் 2022 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் மீதான கணக்காய்வு இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசிற்கும் சர்வதேச அபிவிருத்திச் சங்கத்திற்கும் இடையில் கைச்சாத்திடப்பட்ட 2019 மே 14 ஆம் திகதிய 6371–எல்கே ஆம் இலக்க கடன் உடன்படிக்கையின் 01 ஆம் பட்டியலின் 4.2 ஆம் உறுப்புரையுடன் சேர்த்து வாசிக்கப்படும் இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 154(1) ஆம் உறுப்புரையிலுள்ள ஏற்பாடுகளுக்கமைய எனது பணிப்பின் கீழ் மேற்கொள்ளப்பட்டது. பாராளுமன்றத்திற்குச் சமர்ப்பிக்கப்பட வேண்டுமென நான் கருதுகின்ற எனது கருத்துரைகளும் அவதானிப்புக்களும் இந்த அறிக்கையில் காணப்படுகின்றன.

**1.2 செயற்திட்டத்தின் அமுலாக்கம், நோக்கங்கள், நிதியளிப்பு மற்றும் காலப்பகுதி**

செயற்திட்டக் கடன் உடன்படிக்கையின் பிரகாரம், பொது நிர்வாக, உள்நாட்டலுவல்கள், மாகாண சபைகள் மற்றும் உள்ளூராட்சி அமைச்சு செயற்திட்டத்தின் நிறைவேற்றல் முகவராக உள்ளதுடன் 04 மாகாணங்களின் மாகாண சபைகள் அமுல்ப்படுத்தல் முகவர்களாக உள்ளன. சமூகங்களுக்குப் பதிலளிக்கக்கூடிய மற்றும் கணக்களிப்பொறுப்புடன் சேவைகளை வழங்குவதற்கு உள்ளூராட்சி சபைகளின் திறன்களை வலுப்படுத்துவதும், பங்குபற்றும் மாகாணங்களின் பொருளாதார உட்கட்டமைப்பு அபிவிருத்திக்கு ஆதரவளிப்பதும் செயற்திட்டத்தின் நோக்கங்களாகும். கடன் மற்றும் மானிய உடன்படிக்கைகளின் பிரகாரம் செயற்திட்டத்தின் மதிப்பிடப்பட்ட மொத்தக் கிரயம் ரூபா 17,665.63 மில்லியனிற்குச் சமமான ஐ.அ.டொலர் 100.65 மில்லியனாக இருந்ததுடன் அதில் ரூபா 12,222.41 மில்லியனிற்குச் சமமான ஐ.அ.டொலர் 70 மில்லியன் சர்வதேச அபிவிருத்திச் சங்கத்தால் நிதியளிக்கப்படுவதற்கு உடன்பாடு காணப்பட்டது. ரூபா 4,220.98 மில்லியனிற்குச் சமமான ஐ.அ.டொலர் 23.65 மில்லியன் மிகுதி தொகை ஐரோப்பிய ஒன்றியத்தால் நிதியளிக்கப்படுவதற்கு உடன்பாடு காணப்பட்டது. செயற்திட்டம் அதன் நடவடிக்கைகளை 2019 யூன் 30 இல் தொடங்கியிருந்ததுடன் 2022 திசெம்பர் 30 அளவில் பூர்த்தி செய்யப்படுவதற்கு பட்டியலிட்டிருந்தது.

**1.3 அபிப்பிராயம்**

செயற்திட்டத்தின் 2022 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமையினையும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான செலவினக் கூற்றையும் அதனது காசுப்பாய்ச்சலினையும் இலங்கை கணக்கீட்டு நியமங்களிற்கு இணங்க இணைக்கப்பட்டுள்ள நிதிக்கூற்றுக்கள் உண்மையாகவும் நியாயமாகவும் தருகின்றன என்பது எனது அபிப்பிராயமாகும்.

**1.4 அபிப்பிராயத்திற்கான அடிப்படை**

இலங்கை கணக்காய்வு நியமங்களுக்கு (எஸ்எல்ஏயூஎஸ்எஸ்) இணங்க எனது கணக்காய்வினை நான் மேற்கொண்டேன். அந்நியமங்களின் கீழான எனது பொறுப்புக்கள் எனது அறிக்கையில் நிதிக்கூற்றுக்களின் கணக்காய்விற்கான கணக்காய்வாளரின் பொறுப்புக்கள் பந்தியில் மேலும் விபரிக்கப்படுகின்றன. எனது அபிப்பிராயத்திற்கான அடிப்படை ஒன்றினை வழங்குவதற்கு போதியளவும் பொருத்தமானதுமான கணக்காய்வுச் சான்றுகளை நான் பெற்றுக்கொண்டுள்ளேன் என நான் நம்புகிறேன்.

**1.5 நிதிக்கூற்றுக்களிற்கான முகாமைத்துவத்தினதும் அவ் ஆளுகைக்கு உட்பட்ட தரப்பினர்களினதும் பொறுப்புக்கள்**

நிதிக்கூற்றுக்களை இலங்கை கணக்கீட்டு நியமங்களிற்கு இணங்க தயாரித்து சரியாகவும் நியாயமாகவும் சமர்ப்பித்தல் மற்றும் மோசடி அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களிலிருந்து விடுபட்ட நிதிக்கூற்றுக்களைத் தயாரிப்பதற்கு அவசியமானதென முகாமைத்துவம் நிர்ணயிக்கின்ற அத்தகைய உள்ளகக் கட்டுப்பாடுகள் என்பவற்றிற்கு முகாமைத்துவம் பொறுப்பாக உள்ளது.

செயற்திட்டத்தின் நிதி அறிக்கையிடல் செயன்முறையை மேற்பார்வை செய்தல் அவ் ஆளுகைக்குட்பட்ட தரப்பினர்களின் பொறுப்பாக உள்ளது.

**1.6 நிதிக்கூற்றுக்களின் கணக்காய்விற்கான கணக்காய்வாளரின் பொறுப்புக்கள்**

மோசடி அல்லது தவறு காரணமாக ஏற்படக்கூடிய அனைத்துப் பொருண்மையான பிறழ் கூற்றுக்களிருந்தும் நிதிக்கூற்றுக்கள் விடுபட்டுள்ளனவா என்பதற்கான நியாயமான உறுதிப்பாட்டைப் பெற்றுக்கொள்வதும் எனது அபிப்பிராயத்தை உள்ளடக்குகின்ற கணக்காய்வாளர் அறிக்கை ஒன்றை வழங்குவதும் எனது குறிக்கோள்களாக உள்ளன. நியாயமான உறுதிப்பாடென்பது உறுதிப்பாட்டின் உயர் நிலையொன்றாக காணப்படுகின்ற போதிலும் இலங்கை கணக்காய்வு நியமங்களிற்கு இணங்க மேற்கொள்ளப்படுகின்ற கணக்காய்வில் பொருண்மையான பிறழ்கூற்றொன்று காணப்படுகையில் அதனை எல்லா வேளையிலும் கண்டுபிடிக்கும் என்பதற்கு அது உத்தரவாதத்தினை வழங்குவதில்லை. பிறழ்கூற்றுக்களானவை மோசடி அல்லது தவறு காரணமாக எழக்கூடுமென்பதுடன் அவற்றுள் இந்த நிதிக்கூற்றுக்களை அடிப்படையாகக் கொண்டு பாவனையாளர்களால் மேற்கொள்ளப்படும் பொருளாதாரத் தீர்மானங்கள் மீது தனித்தனியாகவோ அல்லது கூட்டுமொத்தமாகவோ செல்வாக்குச் செலுத்தக்கூடுமென நியாயமாக எதிர்பார்க்கப்படுபவை பொருண்மையானவையாக கருத்திலெடுக்கப்படும்.

இலங்கை கணக்காய்வு நியமங்களின் பிரகாரம் கணக்காய்வின் பகுதியொன்றாக, கணக்காய்வின் போது உயர்தொழில் தீர்ப்புக்களை நான் மேற்கொண்டு உயர்தொழில் ஐயப்பாட்டினையும் பேணுகின்றேன். அத்துடன்;

- மோசடி அல்லது தவறு காரணமாக நிதிக்கூற்றுக்களிற்கு ஏற்படக்கூடிய தவறான கூற்றுக்களின் பொருண்மையான ஆபத்துக்களை இனங்கண்டு மதிப்பீடு செய்தல், அந்த இடர்களை எதிர்கொள்ளக்கூடிய கணக்காய்வு நடைமுறைகளை வடிவமைத்துச் செயற்படுத்துதல் மற்றும் எனது அபிப்பிராயத்திற்கான அடிப்படை ஒன்றினை வழங்குவதற்குப் போதியளவும் பொருத்தமானதுமான கணக்காய்வுச் சான்றுகளை பெற்றுக்கொள்ளுதல். மோசடியானது தவறான கூட்டிணைவு, தவறான ஆவணம் தயாரித்தல், வேண்டுமென்று விட்டுவிடுதல்கள், தவறான வெளிப்படுத்தல்கள் அல்லது உள்ளகக் கட்டுப்பாட்டிலான எல்லை மீறல்களை உள்ளடக்குவதால் மோசடி மூலம் ஏற்படும் பொருண்மையான பிறழ் கூற்றொன்றைக் கண்டுபிடிக்காது விடுவதால் ஏற்படும் ஆபத்தானது தவறின் மூலமான விளைவொன்றைவிடக் கூடியதாகும்.

- சந்தர்ப்பங்களிற்குப் பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளை வடிவமைப்பதற்காக கணக்காய்வுடன் தொடர்புடைய உள்ளகக் கட்டுப்பாடுகள் தொடர்பான அறிவை பெற்றுக்கொள்வதற்காகவேயன்றி செயற்திட்டத்தின் உள்ளகக் கட்டுப்பாடுகளின் செயற்திறன் மீது அபிப்பிராயமொன்றை தெரிவிக்கும் நோக்கத்திற்காக அல்ல.

- பயன்படுத்திய கணக்கீட்டுக் கொள்கைகளின் பொருத்தப்பாடுகளையும் கணக்கீட்டு மதிப்பீடுகளின் நியாயத் தன்மையினையும் மற்றும் முகாமைத்துவத்தால் மேற்கொள்ளப்பட்ட தொடர்புடைய வெளிப்படுத்தல்களினையும் மதிப்பீடு செய்தல்.

- வெளிப்படுத்தல்கள் அடங்கலாக நிதிக்கூற்றுக்களின் ஒட்டுமொத்த சமர்ப்பித்தல், கட்டமைப்பு மற்றும் உள்ளடக்கங்களை மதிப்பீடு செய்தல் மற்றும் நியாயமான சமர்ப்பித்தலினை நிறைவேற்றுவதற்கு அடிப்படையாகக் காணப்பட்ட கொடுக்கல் வாங்கல்கள் மற்றும் நிகழ்வுகளை நிதிக்கூற்றுக்கள் பிரதிநிதித்துவம் செய்கின்றனவா என்பதனை மதிப்பீடு செய்தல்.

எனது கணக்காய்வின் போது என்னால் இனங்காணப்படுகின்ற உள்ளகக் கட்டுப்பாடுகளிலுள்ள ஏனைய விடயங்களிற்கிடையேயான ஏதாவது முக்கியமான குறைபாடுகள் உள்ளடங்கிய முக்கியமான கணக்காய்வுக் காண்புகள் தொடர்பாக ஆளுகையுடன் தொடர்புபடுத்தப்பட்டவைகளை நான் தெரிவிக்கின்றேன்.

## 2. நிதிக்கூற்றுக்கள் மீதான கருத்துரைகள்

### 2.1 சட்டங்கள், விதிகள் மற்றும் பிரமாணங்களுடன் இணங்காமை

| இல. | சட்டங்கள், விதிகள் மற்றும் பிரமாணங்களுடனான தொடர்பு | இணங்காமைகள் | முகாமைத்துவத்தின் பதில்கள் | கணக்காய்வாளரின் பரிந்துரைகள் |
|---|---|---|---|---|
| (அ) | 2019 மார்ச் 05 ஆம் திகதிய 01/2019 ஆம் இலக்க முகாமைத்துவ சேவை சுற்றறிக்கையின் 2.3.3 (இ) பந்தி | பொதுச் சேவையில் உறுதிப்படுத்தப்பட்ட உத்தியோகத்தர் ஒருவர், அவரது/அவளது முக்கிய பதவியில் பணியாற்றும் போது பதிற்கடமை அடிப்படையில் சேவைக்கு விடுவிக்கப்படலாம். எனினும், சுற்றறிக்கையில் உள்ள ஏற்பாடுகளுக்கு முரணாக, வடமத்திய மற்றும் ஊவா மாகாண உள்ளூராட்சி ஆணையாளர்கள் பிரதிப் பணிப்பாளர்களாக நியமிக்கப்பட்டு சம்பளமாக ரூபா 963,000 தொகை செலுத்தப்பட்டுள்ளது. | 01/2019 ஆம் இலக்க முகாமைத்துவ சுற்றறிக்கையில் உள்ள ஏற்பாடுகளுக்கு முரணாக பிரதம செயலாளர்கள் செயற்பட்டார்களா என்பதைக் கண்டறிவதற்கு செயற்திட்ட பணிப்பாளரிற்கு அறிவுறுத்தப்பட்டுள்ளது. | சுற்றறிக்கை அறிவுறுத்தலிற்கு முரணாக செலுத்தப்பட்ட சம்பளத்தை அறவிடுவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். |
| (ஆ) | 2019 மார்ச் 05 ஆம் திகதிய 01/2019 ஆம் இலக்க முகாமைத்துவ சேவை சுற்றறிக்கையின் 9.3 ஆம் பந்தி | செயற்திட்ட வழிநடாத்தல் குழுக்களின் கூட்டம் 02 மாதங்களுக்கு ஒருமுறை நடாத்தப்பட வேண்டிய போதிலும் மீளாய்வாண்டில் 03 கூட்டங்கள் மாத்திரமே நடாத்தப்பட்டுள்ளன. | கருத்துரைகள் எதுவும் வழங்கப்படவில்லை. | செயற்திட்ட வழிநடாத்தல் குழுக்களின் கூட்டங்கள் தொடர்ந்து நடாத்தப்பட வேண்டும். |

## 3. பௌதீக செயலாற்றல்

### 3.1 செயற்திட்ட நடவடிக்கைகளின் பௌதீக முன்னேற்றம்

| கணக்காய்வு விடயம் | முகாமைத்துவத்தின் பதில்கள் | கணக்காய்வாளரின் பரிந்துரைகள் |
|---|---|---|
| நான்கு மாகாணங்களில் ரூபா 1,614 மில்லியன் தொகையான மதிப்பிடப்பட்ட கிரயத்தில் 80 உபசெயற்திட்டங்கள் 2022 திசெம்பர் 31 இற்குள் பூர்த்தி செய்யப்பட வேண்டியிருந்த போதிலும், பௌதீக முன்னேற்றம் 20% முதல் 95% வரை இருந்தது. | கருத்துரைகள் எதுவும் வழங்கப்படவில்லை. | தேவையான தர மட்டத்தை உறுதிப்படுத்தும் வகையில் சிவில் பணிகளை உடனடியாக பூர்த்தி செய்வதற்கு செயற்திட்டம் ஒப்பந்ததாரரை வழிகாட்டுதல் வேண்டும். |

**3.2 பூர்த்தி செய்யப்படாத ஆலோசனை பணி**

| கணக்காய்வு விடயம் | முகாமைத்துவத்தின் பதில் | கணக்காய்வாளரின் பரிந்துரை |
|---|---|---|
| இயலளவைக் கட்டியெழுப்புதல், கண்காணிப்பு மற்றும் மதிப்பீடு, வடக்கு மற்றும் கிழக்கு மாகாணங்களில் பொருளாதார உட்கட்டமைப்பு அபிவிருத்தி மற்றும் ஊவா மற்றும் வடமத்திய மாகாணங்களில் பொருளாதார உட்கட்டமைப்பு அபிவிருத்தி ஆகிய பணிகளை 2020 சனவரி 10 இல் அல்லது அதற்கு முன்னர் பூர்த்தி செய்வதற்கு நான்கு ஆலோசனையாளர்கள் நியமனம் செய்யப்பட்டு ரூபா 3.7 மில்லியன் பகுதிக் கொடுப்பனவு மீளாய்வாண்டின் போது மேற்கொள்ளப்பட்டிருந்த போதிலும் உரிய காலப்பகுதியில் பூர்த்தி செய்யப்பட்டிருக்காத மேலே குறிப்பிட்ட ஆலோசனைப் பணிகளிலிருந்து எந்த நலனும் பெறப்பட்டிருக்கவில்லை. | பூர்த்தி செய்யப்படாத வேலை பயன்படுத்தப்பட்டிருந்தது. | கொடுப்பனவை அறவீடு செய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். |

**3.3 பறம்பான செயற்பாடுகள்/ செயற்திட்ட நோக்கங்களிற்கு அப்பால் மேற்கொள்ளப்பட்ட கொடுப்பனவுகள்**

| இல. | கணக்காய்வு விடயங்கள் | முகாமைத்துவத்தின் பதில்கள் | கணக்காய்வாளரின் பரிந்துரைகள் |
|---|---|---|---|
| (அ) | செயற்திட்ட நடவடிக்கைகளைத் தொடங்குவதற்கு முன்னர் செயற்திட்ட ஆயத்தப் பணிகளை பூர்த்தி செய்வதற்காக நியமிக்கப்பட்ட, பெறுகை மற்றும் தொழில்நுட்பம், பொது நிதி முகாமைத்துவம், உள்ளூராட்சி சபையின் பங்கேற்பு அபிவிருத்தி திட்டத்திற்கான வசதி மற்றும் சுற்றாடல் மற்றும் சமூக பாதுகாப்பு தொடர்பான நான்கு தனிப்பட்ட ஆலோசகர்களுக்கு ரூபா 6.47 மில்லியன் பகுதி கொடுப்பனவு மேற்கொள்ளப்பட்டிருந்தது. எனினும், மேற்குறிப்பிட்ட ஆலோசனைப் பணிகளை உரிய காலத்தில் பூர்த்தி செய்யாத காரணத்தால், மேற்படி செலவினம் பயனற்ற செலவினமாகக் கருதப்பட்டிருந்தது. 2022 பெப்ரவரி 23 இல் பணியை பூர்த்தி செய்யாமல் மிகுதிக் கொடுப்பனவை செலுத்துவதற்காக பெறுகைத் தீர்மானம் எடுக்கப்பட்டிருந்தது. | கருத்துரைகள் எதுவும் வழங்கப்படவில்லை. | கொடுப்பனவை அறவிடுவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். |
| (ஆ) | 2020 திசெம்பர் 31 வரை வட மத்திய மாகாணம், வட மாகாணம் மற்றும் தொடர்புடைய உள்ளூராட்சி சபைகளால் LAPDPs ஐ தயாரிப்பதற்காக ரூபா 4.93 மில்லியன் கூட்டுமொத்த தொகை செலுத்தப்பட்டுள்ளது. எனினும், தொடர்புடைய உள்ளூராட்சி சபைகளால் LAPDPs I தயாரிப்பதற்காக அதிக முன்னுரிமை அளிக்கப்பட்ட உப செயற்திட்டங்களை தெரிவுசெய்யத் தவறியதால் விளைவற்ற செலவினமாக அவதானிக்கப்பட்டது. | கருத்துரைகள் எதுவும் வழங்கப்படவில்லை. | கடன் உடன்படிக்கையில் உள்ள வழிகாட்டலின் பிரகாரம் உப செயற்திட்டம் தெரிவுசெய்யப்பட வேண்டும். |
| (இ) | உள்ளூராட்சி சபைகளுக்கு பணத்தை விடுவிக்கும் போது செயற்திட்ட செயற்பாட்டு கையேட்டின் 2.9 இல் குறிப்பிடப்பட்டுள்ள செயற்திட்டங்களுக்கு பணம் விடுவிக்கப்படக்கூடாது என குறிப்பிடப்பட்டுள்ளது. | கருத்துரைகள் எதுவும் வழங்கப்படவில்லை. | செயற்திட்ட செயற்பாட்டுக் கையேட்டின் ஏற்பாடுகளின் |

| | | | |
|---|---|---|---|
| | எனினும், அப்படியே அகற்றப்பட வேண்டிய 2022 திசெம்பர் 31 இற்குள் 58 செயற்திட்டங்களுக்காக 4 மாகாணங்களில் ரூபா 105 மில்லியன் தொகை விடுவிக்கப்பட்டுள்ளது, | | பிரகாரம் நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். |
| (ஈ) | உள்ளுர் அபிவிருத்தி உதவி செயற்திட்டமானது சமூகங்களுக்குப் பதிலளிக்கக்கூடிய மற்றும் கணக்களிப் பொறுப்புவாய்ந்த முறையில் சேவைகளை வழங்குவதற்காக உள்ளூராட்சி சபைகளின் திறனை வலுப்படுத்துவதையும், பங்கேற்கும் மாகாணங்களில் பொருளாதார உட்கட்டமைப்பை மேம்படுத்துவதையும் நோக்கமாகக் கொண்டுள்ளதுடன் கடன் உடன்படிக்கையின் பிரகாரம் அடிப்படை மற்றும் செயலாற்றல் இடமாற்றங்கள் உள்ளுராட்சி சபைகளுக்கு மாத்திரமே வழங்கப்படுகிறது. ஆனால், கடன் உடன்படிக்கை ஏற்பாடுகளுக்கு முரணாக ரூபா 118 மில்லியன் அடிப்படை இடமாற்றங்கள் மற்றும் செயலாற்றல் பரிமாற்றங்கள் முற்பணமாக வழங்கப்பட்டு, 2022 திசெம்பர் 31 இல் உள்ளவாறு ரூபா 13 மில்லியன் செலவிடப்பட்டிருந்தமை கணக்காய்வின் போது அவதானிக்கப்பட்டது. | கருத்துரைகள் எதுவும் வழங்கப்படவில்லை. | செயற்திட்ட செயற்பாட்டுக் கையேட்டின் ஏற்பாடுகளின் பிரகாரம் நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். |

### 3.4 முறைமைகளும் கட்டுப்பாடுகளும்

| இல. | கணக்காய்வு விடயங்கள் | முகாமைத்துவத்தின் பதில்கள் | கணக்காய்வாளரின் பரிந்துரைகள் |
|---|---|---|---|
| (அ) | கடன் உடன்படிக்கையின் 02 ஆம் பட்டியலின் உறுப்புரை (இ) இன் பிரகாரம் 04 மாகாண சபைகளுடன் உடன்படிக்கைகளில் கைச்சாத்திடுவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. | வெளிநாட்டு வளங்கள் திணைக்களத்துடனான கலந்துரையாடலின் பின்னர் மாகாண சபைகளுடன் உடன்படிக்கை கைச்சாத்திடப்படும். | உடன்படிக்கைகளில் கைச்சாத்திடுவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். |
| (ஆ) | கடன் உடன்படிக்கையின் 02 ஆம் பட்டியலின் உறுப்புரை உ இன் பிரகாரம் 2022 ஆம் ஆண்டிற்கான வருடாந்த பாதீடு மற்றும் பணித் திட்டம் வழிகாட்டல் குழுவிடம் இருந்து அங்கீகாரம் பெறப்பட்டதா என்பதை உறுதிப்படுத்துவதற்கு கணக்காய்விற்கு சான்றுகள் சமர்ப்பிக்கப்பட்டிருக்கவில்லை. | பணித் திட்டம் மற்றும் பாதீடு என்பன வழிகாட்டல் குழுவிற்கு சமர்ப்பிக்கப்பட்டுள்ளது. | பாதீடு மற்றும் செயல்நடவடிக்கைத் திட்டதை தயாரித்து வழிநடாத்தல் குழுவிடமிருந்து அங்கீகாரத்தை பெற்றுக்கொள்வதற்கு நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். |
| (இ) | செயற்திட்டம் ஆரம்பிக்கப்படுவதற்கு முன்னர் ரூபா 1.7 மில்லியன் செலவினம் செயற்திட்டச் செலவினத்தின் கீழ் கணக்கீடு செய்யப்பட்டிருந்தது. | கருத்துரைகள் எதுவும் வழங்கப்படவில்லை. | இந்த செலவினங்கள் செயற்திட்டம் தொடர்பானவை என்பதை உறுதிப்படுத்துவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். |